1972 மார்ச் 21]

திட்டமாகும். எனவே திருப்பூரையும் இந்த நெல்லித்துறை திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டு குடிநீர் வாரியமும் இதை ஏற்றிருப்பதாக அறிகிறேன். அப்படி வளர்ச்சி பெற்று வருகிற நகரத்திற்குப் பல்லடத்திலிருந்து கொண்டு வர வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அதையும் சேர்ப்பதற்கு இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நிதி அளவு, நீர் அளவு இவையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும்.

திரு. என். மருதாசலம் : நெல்லித்துறைத் திட்டம் விவசாயிகளுக்குப் பயன்படும்படிக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடிநீருக்குத் தேவையான அளவிற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு எல்லாப் பகுதிகளுக்கும் இயலாத சூழ்நிலையில் விவசாயத்தைப் பற்றி யோசிப்பது கடினமானது.

தீ அணைப்பு நிலையங்கள்.

*595 வினா.—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு தாலூகா தலைநகரிலும் தீ அணைப்பு நிலையங்கள் Fire stations ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சமீபத்தில் ஃபையர் சர்வீஸ் தனி இலாகாவாகப் பிரிக்கப்பட்டு வட மாவட்டங்களுக்கு ஒரு பகுதியும், தென் மாவட்டங்களுக்கு ஒரு பகுதியும் வந்து, பல இடங்களிலும் இம்மாதிரி தங்கள் ஊர்களிலும் ஃபையர் சர்வீஸ் ஸ்டேஷன்ஸ் வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு புதிதாக எந்தெந்த இடங்களில் திறப்பதற்கு ஆலோசனை இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1971–72-ல் உத்தரவிடப் பட்டுள்ள இடங்கள் மணலி, கள்ளக்குறிச்சி, ஜெயங்கொண்ட சோழபுரம். 1972–73-ல் உத்தமபாளையம், கோவில்பட்டி, குழித் துறை, மேட்டூர் ஆகிய இடங்கள்.

திரு. நா. வீராசாமி : தாலூகா தலைநகரங்களில் தீ அணைப்பு நிலையங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டபோது இல்லை என்று சொன்னார்கள். ஆனால் ரெவின்யூ டிவிஷன் ஹெட்க்வார்ட்டேர்சில் இவை தேவையாக இருக்கின்றன. அங்கெல்லாம் ஒவ்வொரு தீ அணைக்கும் அலுவலகம் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. பல தாலூகா தலைநகரங்கள் ரெவின்யூ டிவிஷன் ஹெட்க்வார்ட்டேர்சுக் குள் வருவதில்லை. எனவே தாலூகா தலைநகரங்களுக்கு இல்லை என்று சொன்னாலும் பெரிய நகரமன்றத் தலைநகரங்களிலாவது இப்படிப்பட்ட தீ அணைக்கும் அலுவலகங்கள் வைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பல்வேறு இடங்களிலும் தீ அணைக்கும் நிலையங்கள் வைக்கவேண்டும் என்றுதான் அரசு ஆர்வத்துடன் இருக்கிறது. ஆனால் செலவினங்களைப் பார்க்கும் போதுதான் அது கஷ்டமாகயிருக்கிறது. இப்போதே ஒரு தீ அணைக்கும் நிலையத்திற்கு தொடரா இனச் செலவாக ஏறத்தாழ 2,15,000 ரூபாயும், தொடர் இனச் செலவாக ஆண்டு ஒன்றுக்கு 1,23,000 ரூபாயும் செலவாகிறது. இவற்றையெல்லாம் மனதில் வைத்துத்தான் படிப்படையாக ஆண்டுதோறும் நான்கு இடங்கள் அல்லது ஐந்து இடங்கள் என்றளவில் இவைகளை அமைக்க முடிகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன் : முதல் அமைச்சர் அவர்கள் தாலூகா தலைநகரங்களில் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை என்று சொன்னார்கள். போளூரைப் பொறுத்தவரையில் அங்கு ஏற்படுகிற தீ விபத்துக்களுக்கு உதவி கோரவேண்டுமென்றால் வேலூர் அல்லது திருவண்ணாமலையில் இருந்து வரவேண்டி யிருக்கிறது. எனவே அந்தப் பகுதி ஊராட்சிமன்றங்கள் மூலம் அரசுக்குக் கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். அவற்றை அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கோரிக்கைகள் அனுப்பியது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்

1972 மார்ச் 21]

அவர்கள் சொன்னதுபோல் தமிழ் நாட்டில் இப்போது 58 நகரங்களில் இந்தத் தீ அணைப்பு நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பரவலாக வைக்கவேண்டும் என்று அரசாங்கம் எண்ணுகிறது என்றாலும், நிதிநிலைமை இடம் தராத காரணத்தினால் ஆண்டு தோறும் படிப்படியாக இந்த நிலையங்கள் திறக்கப்படும் என்று கூறினேன்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : நான்கு மாதங்களுக்கு முன்பு எங்கள் ஏரியாவில் முக்கூடலில் ஒரு மாபெரும் தீ விபத்து ஏற்பட்டு கிட்டத்தட்ட முப்பது லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் தீயினால் பாதிக்கப்பட்டது. அந்தமாதிரி பீடிக் கம்பெனிகள் அந்த ஏரியாவில் அதிகமாக இருப்பதால் அம்பாசமுத்திரம் தாலூகாவில் உடனடியாக ஒரு தீ அணைப்பு நிலையம் அமைத்துத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கனவே பல்வேறு கேள்விகளுக்கு இதைப்பற்றி சொன்ன பதிலைத்தான் இதற்கும் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

பாரதியாரின் பிறந்த நாள்.

*596 வின.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த தினத்தை அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) அத்தகைய செயற்குறிப்பு யாதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா : நம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் போன்று நம் தமிழகத்தில் நிறையப் பேர்கள் தேச விடுதலைக்காகப் போராடியிருக்கிறார்கள். ஆனால் இதில் சுப்பிரமணிய பாரதியார் மிக முக்கிய மானவர். ஆகவே இவருக்காவது அரசாங்கம் விடுமுறை விடும்